# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் - 07.04.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 17719/F/2023</u>**

திரு.K.மச்சேந்திரன் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(கும்பகோணம்) லிமிட்,
காரைக்குடி மண்டலம்,
காரைக்குடி-630307. .. பொது அதிகார அமைப்பு

## <u>ஆணை</u>

இவ்வாணையத்தில் இன்று 07.04.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.K.மச்சேந்திரன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுதகவல் அலுவலர் திரு.P.தமிழ்மாறன், துணை மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிட்., காரைக்குடி மண்டலம், காரைக்குடி அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 09/05/2023 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் தான் 01.12.1992ல் பணி நிரந்தரம் செய்யப்பட்டு பரமக்குடி கிளையில் நடத்துனராக பணி செய்து வந்த நிலையில் 23.06.1995 வரை பணி செய்து முடித்த பிறகு வேலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டு விட்டதாகவும் தான் பணி செய்த காலங்களில் தனக்கு நிர்வாகம் வழங்க

வேண்டிய பணப்பலன்கள் வழங்க மறுக்கப்பட்டதற்கும் இதற்காக நிர்வாகம் தன்மீது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் சம்மந்தமான தகவல்களையும் மேலும் அதன் தொடர்புள்ள தகவல்களையும் தனது 25.07.2022 தேதியிட்ட மனுவில் கோரியிருந்ததாகவும் தனது மனுமீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் சம்மந்தமாக தனக்கு உரிய தகவல்களை வழங்கவும் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 15.06.2023 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர் பொதுத்தகவல் அலுவலர் சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 08.07.2023 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை. இந்நிலையில் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழ் 06.10.2023 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.04.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 15.06.2023 மற்றும் 04.12.2023 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து மனுதாரரின் கருத்துக்களையும், வாதங்களையும் தெரிவிக்க அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தும் அவர் இன்றைய விசாரணைக்கு (07.04.2026) ஆஜராகத் தவறியுள்ளார். **எனவே, பொது அதிகார அமைப்பினால் 15.06.2023 மற்றும் 04.12.2023 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதை உறுதி செய்து இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 17719/F/2023</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(கும்பகோணம்) லிமிட்,
காரைக்குடி மண்டலம்,
காரைக்குடி-630307.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.மச்சேந்திரன்,
7/200-60, வைகை நகர்,
எமனேஸ்வரம் அஞ்சல்,
பரமக்குடி,
இராமநாதபுரம்- 623701.

Copy to file: KR/PA